05.12.2024

O.S.No.74/2015

வா.சா.2.திரு. அசல் முகமது த.பெ. முகமது மீரா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு** விசாரணை

வாதிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். வாதிகள் அழைத்தன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிகளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் எனக்கு விபரம் தெரிந்தது முதல் வாதிகள் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்து வாதியின் தந்தை அப்துல்காசிம் பெயரில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் இருந்து கிராம நத்தமாக உள்ளது என்றால் சரிதான் அதில் வைக்கல்போர் வாதிகள் வைத்திருந்தார்கள். சர்வே எண் 600 ல் 21 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கு 2- 1/4 சென்டுக்கு பட்டா உள்ளது என்றாலும் அதை தவிர்த்து மீத இடம் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை வாதிகள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. வாதிகளுக்குரிய பட்டா இடத்தை தவிர வேறு இடங்களில் அவர்கள் அனுபவத்தில் இல்லை என்பதாலும் அவர்கள் உறவினர் என்பதால் தாவா மொத்த சொத்திலும் வாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.